நிர்வாகத்திறனற்ற 'டம்மி' முதல்வரின் லட்சணம் பாரீர்!

பருவமழை தீவிரம்! 10 நாட்களாக ஒரு அறிக்கை கூட இல்லையா?

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்திடம் சிக்கிய விஜய் அரசு! முழு பின்னணி!

சென்னை, அக்.30-

அக்டோபர் 16 முதல் அக்டோபர் 26 வரை, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்குத் தமிழக அரசு தினசரி சூழ்நிலை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள இச்சூழலில், மாநிலத்தில் நிலவும் பேரிடர் பாதிப்புகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்த கள நிலவரத்தை ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கும் முதன்மை ஆவணமாக இந்த அறிக்கை திகழ்கிறது. இவ்வளவு முக்கியமான தரவுகளைத் தொடர்ந்து 10 நாட்களாகத் தமிழக அரசு சமர்ப்பிக்காதது, பேரிடர் மேலாண்மை நிர்வாகத்தின் மீதான தீவிரக் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்ததினசரிஅறிக்கைகளின்அடிப்படையில்தான், எந்தெந்த மாவட்டங்களில் அதிக பாதிப்புகள் உள்ளன என்பதையும், கூடுதல் தேசிய பேரிடர் மீட்புப் படைகளை எங்கு அனுப்ப வேண்டும் என்பதையும் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தீர்மானிக்கிறது.

மாநில அரசு இந்தத் தரவுகளை அளிக்கத் தவறும்போது, அவசர காலங்களில் மீட்புப் படைகளை உடனுக்குடன் அனுப்புவதில் பெருந்தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இந்திய வானிலை ஆய்வு மையம் வழங்கும் எச்சரிக்கைகளுக்கு மாநில அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இந்த அறிக்கையே வெளிப்படுத்தும் என்பதால், இதன் பங்கு மிக முக்கியமானதாகும்.

பாதிப்புகள் மற்றும் தேவைகள் குறித்த முழுமையான அறிக்கைகள் முறையாகப் பதிவு செய்யப்படாவிட்டால், எதிர்காலத்தில் பேரிடருக்குப் பிந்தைய சேத மதிப்பீடுகளைக் கணக்கிடுவதிலும், ஒன்றிய அரசிடமிருந்து அவசரகால நிவாரண நிதியைப் பெறுவதிலும் கடுமையான நிர்வாக முட்டுக்கட்டைகள் ஏற்படும்.

அக்டோபர் மாத இறுதியில் வங்கக் கடலில் புயல் சின்னங்கள் உருவாகும் வாய்ப்புள்ளதாகவும், சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள சூழலில், இந்தத் தரவுப் பகிர்வுத் தாமதம் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லியில் மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தலைமையில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, பா.அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலையில், கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ், பிரபுகஜேந்திரன், சி.ஜெரால்டு, மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், மேயர்ஜி.உதயகுமார், சன்.பிரகாஷ், ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, ஜி.நாராயணபிரசாத், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, தி.வை.ரவி, ஆர்.ஜெயசீலன், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம்ஆனந்த், தங்கம்முரளி, டி.முரளிகிருஷ்ணன், உள்பட பலர் உள்ளனர்

சிவகங்கை மாவட்டத்தில் தடை உத்தரவு!

சிவகங்கை மாவட்டத்தில் மகளிரணி ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை , அக். 30-

நாளை (31ம்தேதி) நடைபெற இருந்த மகளிரணிஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்படு கிறது . இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் மாவட்ட தலைநகரங்களில் நாளை (31 ஆம் தேதி) த.வெ.க. ஆட்சியின் அவல நிலை, விலைவாசி உயர்வு ,



பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பற்றநிலை, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, போன்றவற்றை கண்டித்து மகளிரணி அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்திருந்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் மாமன்னர் மருது பாண்டியர்கள் குருபூஜை, பசும்பொன் தேவர் குருபூஜையினை முன்னிட்டு காவல்துறையின் சார்பில் 144 தடை உத்தரவு 20ஆம் தேதி முதல் 31ம் தேதி வரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடைக்காது. இதை முன்னிட்டு நாளை (31ஆம் தேதி) நடைபெறுவதாக இருந்தமகளிரணி ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது.

இது குறித்து தலைமை கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே நாளை சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் பின்பு வேறொரு தேதியில் தலைமைக் கழகம் அனுமதி பெற்று நடைபெறும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆய்வு!

மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது!

திருவள்ளூர்: அக் 30

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, பா.அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் பகுதி செயலாளர் ஜி.நாராயணபிரசாத், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

கூட்டத்தில், கழக மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பாக ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகளுடன் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கழக அமைப்புகளை வலுப்படுத்துதல், நிர்வாகப் பணிகளைச் சீரமைத்தல், கட்சியின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும், மறுசீரமைப்புப் பணிகளைச் சிறப்பாகவும், விரைந்து முடிக்கும் வகையிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிர்வாகிகளுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில அணிகளின் நிர்வாகிகள், பிரபுகஜேந்திரன், சி.ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மேயர் ஜி.உதயகுமார், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் சன்.பிரகாஷ், டி.தேசிங்கு, ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், என்.இ.கே.மூர்த்தி, தி.வை.ரவி, ஆர்.ஜெயசீலன், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம்ஆனந்த், தங்கம் முரளி, டி.முரளி கிருஷ்ணன், மற்றும் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர் முடிவில் பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி நன்றி கூறினார்.

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜனை

நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் மேயர் ஃபில் மாகர் தலைமையிலான குழுவினர் சந்திப்பு!

இரு நகரங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு - மேம்பாட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்!

சென்னை, அக்.30-

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களை, நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் மேயர் ஃபில் மாகர் (Mr. Phil Mauger-Mayor of Christchurch) அவர்கள், தலைமையிலான குழுவினர் மரியாதை நிமித்தமாக சந்தித்து, இரு நகரங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

நேற்று (29.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களை, நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் மேயர் ஃபில் மாகர் (Mr. Phil Mauger - Mayor of Christchurch) அவர்கள், தலைமையிலான குழுவினர் மரியாதை நிமித்தமாக சந்தித்து, இரு நகரங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

பின்னர், நகர்ப்புற மேலாண்மை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நவீன உத்திகளைக் அறிந்து கொள்ளும் வகையில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் துணை மேயர் திருமதி விக்டோரியா ஹென்ஸ்டாக் (Ms. Victoria Henstock - Deputy Mayor of Christchurch), இந்தியா - நியூசிலாந்து வணிகக் கவுன்சில் (INZBC) வாரிய உறுப்பினர் எட்வின் பால் (Mr. Edwin Paul - Board Member, India New Zealand Business Council (INZBC)), மேயர் அலுவலகம் மற்றும் குடிமைச் சேவைகள் அலுவலகத்தின் தலைவர் டங்கன் சாண்டெமன் (Mr. Duncan Sandeman - Head of the Office of the Mayor and Civic Services, Christchurch City Council), காண்டர்பரி பல்கலைக்கழகம் உதவிதுணைவேந்தர் டாக்டர் டேவிட் கிரெய்க் (Dr. David Craig - Assistant Vice-Chancellor, Engagement, University of Canterbury), பன்னாட்டு மேம்பாட்டு இயக்குநர் டாக்டர் கிரஹாம் வைஸ் (Dr. Graham Wise - Director of International Development, University of Canterbury), கிறிஸ்ட்சேர்ச்என் இசட் (ChristchurchNZ - கிறிஸ்ட்சேர்ச் பொருளாதார மேம்பாட்டு முகமை) தலைவர் திருமதி லாரன் குவைன்டன்ஸ் (Ms. Lauren Quaintance - Chairperson, ChristchurchNZ, Christchurch's economic development agency) ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை-பாலக்காடு சூப்பர்பாஸ்ட் ரெயில்களின் சேவையில் மாற்றம்!

சென்னை, அக். 30-

பாலக்காடு சந்திப்பு ரெயில் நிலையத்தில் நடைபெற்று வரும் பொறியியல் பணிகள் காரணமாக, சென்னை - பாலக்காடு இடையிலான சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயில்களின் சேவையில் தற்காலிக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

பாலக்காடு சந்திப்பு ரெயில் நிலையத்தில் நடக்கும் பராமரிப்புப் பணிகள் காரணமாக, அக்டோபர் 30-ந்தேதி முதல் நவம்பர் 13-ந்தேதி வரை ரெயில் சேவைகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சென்னை சென்டிரல் - பாலக்காடு சந்திப்பு சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22651), அக்டோபர் 30-ந்தேதி முதல் நவம்பர் 12-ந்தேதி வரை பாலக்காடு சந்திப்பு ரெயில் நிலையத்துக்குப் பதிலாக பாலக்காடு டவுன் ரெயில் நிலையம் வரை மட்டுமே இயக்கப்படும். இதனால் இந்த ரெயிலின் சேவை பாலக்காடு டவுன் - பாலக்காடு சந்திப்பு இடையே பகுதியளவில் ரத்து செய்யப்படுகிறது.

மறுமார்க்கமாக, பாலக்காடு சந்திப்பு - சென்னை சென்டிரல் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரெயில் (எண் 22652), அக்டோபர் 30-ந்தேதி முதல் நவம்பர் 13-ந்தேதி வரை பாலக்காடு சந்திப்பு ரெயில் நிலையத்துக்குப் பதிலாக பாலக்காடு டவுன் ரெயில் நிலையத்தில் இருந்து மாலை 4.04 மணிக்குப் புறப்படும். இந்த ரெயிலும் பாலக்காடு சந்திப்பு - பாலக்காடு டவுன் இடையே பகுதியளவில் ரத்து செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



தாம்பரம் மாநகரம் 4வது மண்டல குழு தலைவர் - பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் டி.காமராஜ் ஏற்பாட்டில், மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா மாநகர மீனவரணி துணை அமைப்பாளரும் கழக பேச்சாளருமான சே.மைக்கேல் ராஜ் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தையல் இயந்திரம் வழங்கினார். உடன் கி.வேல்மணி, ஜி.கருணாகரபாண்டியன், சி.சுரேஷ், ஆர்.செல்வகுமார், மங்களபுரம் எம்.பாபு, ஆபிஸ் ரவி,எஸ்.கார்த்திக், க.மு.சூரியா, இ.நவீன்குமார், குருமணி, வட்டர் பி.மோகன்,பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

